முக்கிய வார்த்தைகள்:
*முஹாஸபா / சிந்தனை செய்தல்*
*மேம்படுத்துதல்*
*வருந்துதல்*
*நோக்கம்*

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**05 டிசம்பர் 2025 / 14 ஜமாதில் ஆகிர் ஹிஜிரி 1447**

# சுய பரிசோதனை செய்து கொள்வதைச் செயல்படுத்துதல்

الْحَمْدُ لِلَّهِ الَّذِي خَلَقَ الإِنْسَانَ فِي أَحْسَنِ تَقْوِيمٍ، وَأَمَرَنَا بِالتَّقْوَى وَالْخُلُقِ الْكَرِيمِ، وَأَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللَّهِ، اتَّقُوا اللَّهَ حَقَّ تُقَاتِهِ، وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ.

**ஜும்ரதல் முஃமினீன் ரஹிமகுமுல்லாஹ் [ஓரிறை நம்பிக்கை யாளர்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!**
அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீது "தக்வா" [பக்தியை] ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் நம்மை நாம் அலங்கரித்துக் கொள்வோமாக! நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் அல்லாஹ்வின் கட்டளையின் பிரகாரம் இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்' அல்லாஹ் ஏற்படுத்தியுள்ள வரம்புகள் மற்றும் தடைகளை மீறுவதை விட்டும் நம்மை நாம் பாதுகாத்துக் கொள்வோமாக! நமது அனைத்து விவகாரங்களிலும் உதவுமாறும் வழிகாட்டுமாறும் அல்லாஹ்விடம் வேண்டிக் கொள்வோமாக! காரணம், அல்லாஹ் தான், தன் அடியார்களைச் சிறப்பாகப் பாதுகாப்பவனாகவும் அவர்கள் மீது மிகுந்த கிருபை கொள் பவனாகவும் இருக்கின்றான். நாம், வாழ்க்கைப் பயணம் செய்து கொண்டிருக்கும் நிலையில், நமது ஓரிறை

நம்பிக்கையில் நிலைத்தன்மையையும் நமது உள்ளங்களில் எளிதையும் இலகுவையும் அல்லாஹ் வழங்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே**!

ஒவ்வொரு நாளும் நம்மைக் கடந்து செல்லும் போது, ஆண்டின் இறுதிப் பகுதி நம்மை மிக விரைவாக நெருங்கி வருகிறது. நம்மில் சிலர், இந்த ஆண்டில் இன்னென்ன படிப்புகளைப் படித்து முடிக்க வேண்டும்; இன்னென்ன காரியங்களைச் செய்து முடிக்க வேண்டும் என இலக்குகளை நிர்ணயித்திருக்கலாம். ஆனால், நாம் போட்ட அத்திட்டங்களில் சிலவை இன்று நமக்கு நிறைவேறாமலிருக்கலாம். அன்றாட வாழ்க்கையின் தேட்டங்கள் அல்லது நமது கவனத்தைத் தம் பக்கம் இழுத்துக் கொண்ட விஷயங்கள் ஆகியவை அத்திட்டங்கள் நிறைவேறாமலிருப்பதற்குக் காரணமாக இருக்கலாம்.

இவ்விதமான அலுவல்மிக்க நிலையில், நான் செய்து கொண்டிருக்கும் இக்காரியத்தை நான் ஏன் செய்கிறேன்? எனது வாழ்க்கையின் **நோக்கம்** என்ன? நான் ஒவ்வொரு நாளும் செய்து வரும் செயல்கள் மறுமை வாழ்க்கையில் எவ்விதமானத் தாக்கங்களை ஏற்படுத்தும்? எனச் சிந்தித்துப் பார்ப்பதற்கும் நம்மை நாம் கேட்டுக் கொள்வதற்கும் நமக்கு நேரம் கிடைக்காமலிருந்திருக்கலாம்.

இவ்வாறு, "**முஹாஸபா**" [அதாவது, சுயபரிசோதனை] செய்து கொள்வதை ஒவ்வொரு ஓரிறை நம்பிக்கையாளர் மீதும் அல்லாஹ் கடமையாக்கி யுள்ளான். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "அல்-ஹஷ்ர்" எனும் அத்தியாயத்தின் 18-வது வசனத்தில் கூறுகிறான்:

يَـٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ ٱتَّقُواْ ٱللَّهَ وَلْتَنظُرْ نَفْسٌ مَّا قَدَّمَتْ لِغَدٍ ۖ
وَٱتَّقُواْ ٱللَّهَ ۚ إِنَّ ٱللَّهَ خَبِيرٌۢ بِمَا تَعْمَلُونَ ﴿١٨﴾

பொருள்: ஓரிறை நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்து கொள்ளுங்கள்; மேலும், ஒவ்வொருவரும் மறுமை நாளுக்காக, தான் முற்படுத்தி வைத்திருப்பதைப் [பற்றிச் **சிந்தித்துப்**] பார்த்துக் கொள்ளட்டும்; இன்னும் நீங்கள் அல்லாஹ்வை அஞ்சி நடந்து கொள்ளுங்கள்; நீங்கள் செய்பவற்றை, நிச்சயமாக அல்லாஹ் நன்கறிந்தவன்.

இமாம் அஸ்-ஸஅதி [ரஹ்] அவர்கள், தனது திருக்குர்ஆன் விரிவுரையில் குறிப்பிடும் போது: இத்திருக்குர்ஆன் வசனமாகிறது, ஒவ்வொரு அல்லாஹ்வின் அடியாரும் **"முஹாஸபா"** [அதாவது, தன்னைச் சுயபரிசோதனை] செய்து கொள்வதற்கு அடித்தளமிடுகிறது எனக் கூறுகிறார்கள். இவ்விஷயத்தில் பின்வரும் மூன்று செயல்களைச் செய்ய வேண்டுமெனவும் குறிப்பிடுகிறார்கள்:

1, **நாம் தவறு செய்திருந்தால், உடனே அதனைச் சரிசெய்து கொள்ள வேண்டும்.**

அத்தவறைக் கைவிட வேண்டும்; அதற்காக மனப்பூர்வமாக வருந்த வேண்டும்; அத்தவறை மீண்டும் செய்வதற்குக் காரணமாகும் விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும்.

2, **நாம் அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றுவதில் குறை வைத்திருந்தால், முறையாக நிறைவேற்றாமலிருந்தால், அதனைச் சரிசெய்து, நம்மை நாம் மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.** நமது செயல்களைச் செம்மைப்படுத்தி, அவற்றைப் பரிபூரணமாகச் செய்வதற்கு அல்லாஹ்வின் உதவியை நாட வேண்டும்.

3, **நமது குறைபாடுகளையும் அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ள அருட்கொடைகளையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.**

நமது குறைபாடுகளுடன் அல்லாஹ்வின் அருட்கொடைகளை நாம் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, அல்லாஹ் நம்மீது பொழிந்துள்ள அருள்கள் மிகப் பெரிய அளவில் இருப்பதை நாம் அறியலாம்;. அந்நிலையில், அல்லாஹ்வை நினைத்து நமக்கு ஆழமான பணிவும் வெட்கமும் ஏற்படும்;

அச்சிந்தனையானது, அல்லாஹ்வுக்கு அதிகம் கீழ்படிந்து நடக்க வேண்டும்; அதிகம் நன்றி செலுத்த வேண்டும் என நம்மை ஆர்வமூட்டும்.

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே!**
நமது சாதனைகள் எவ்வளவு தான் பெரியவையாக இருப்பினும், எப்போதும் **நம்மை நாம் முன்னேற்றிக்** கொள்ள வேண்டிய அவசியத்தில் தான் நாம் இருக்கின்றோம்; இந்நிலையில், நாம் எப்போதும் அலுவல்மிக்கவர்களாக இருந்தால், எந்தத் துறையில் நம்மை நாம் **முன்னேற்றிக்** கொள்வது அவசியம்? நமது வாழ்க்கையின் இலக்குகளும் குறிக்கோள்களும் தொடர்ந்து தெளிவாக இருப்பதற்கும், நமது நல்ல **நோக்கங்கள்** நிறைவேற்றப்படுவதற்கும் எவ்வாறு நம்மால் சிறப்பாகத் திட்டமிட முடியும்? என்றெல்லாம் நம்மை நாம் கேட்டுக் கொள்ளவில்லையெனில், சிந்திப்பதற்கான வாய்ப்புகளை நாம் தவற விட்டவர்களாக ஆகி விடுவோம்.

எனவே தான், ஒவ்வொரு முஸ்லிமும் **முஹாஸபா** வைச் செயல்படுத்துவது, அதாவது, தொடர்ந்து **சுயபரிசோதனை** செய்து கொள்வது மிகவும் அவசியமாக உள்ளது. இது சம்பந்தமாக இரண்டு கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்:

**முதலாவதாக: முஹாஸபா என்பது சுய பரிசோதனை செய்து கொள்வதாகும்; அவ்வாறு செய்து கொள்வதானது ஓரிறை நம்பிக்கையாளரின் உள்ளத்தைப் பிரகாசமாக்கி, மேம்படுத்தும்.**
பிரபலமான மார்க்க அறிஞர், இமாம் ஹசன் அல்-பஸரீ [ரஹ்] அவர்கள் ஒருமுறை கூறுகையில்: ”ஓரிறை நம்பிக்கையாளர் ஒவ்வொரு விஷயத்திலும், தன்னைத் தொடர்ந்து மதிப்பீடு செய்து கொள்பவராக இருப்பார்; அவர் எந்தச் செயலைச் செய்தாலும் அதனை இன்னும் பரிபூரணமாகச் செய்ய வேண்டியதுள்ளதே என நினைத்து, அதற்காக அவர் **வருந்துவார்;** தான் பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளேனே என உணர்வார். ஆனால், கவனக்குறைவான, கெட்ட நபரோ தன்னைத் தானே கேட்டுக் கொள்ளவும் மாட்டார்; தவறைச் சரிசெய்து கொள்ளவும் மாட்டார்” எனக் கூறினார்கள்.

**முஹாஸபா** செய்வதன் மூலம் ஒருவர், "நான்" என்னும் அகங்காரம் கொள்வதிலிருந்து தவிர்ந்து, பணிவைக் கடைப்பிடிப்பார். அந்த ஆண் அல்லது பெண் தமது குறைபாடுகளை ஏற்றுக் கொள்பவர்களாக இருப்பார்கள்; நான் உட்பட நம்மில் சிலர், பொது இடங்களில் மற்றவர்களுக்குக் கண்ணியமாகச் சேவை செய்கிறோம்; ஆனால் நமது சொந்தக் குடும்ப உறுப்பினர்களிடம் குறைவானப் பொறுமையுடன் நடந்து கொள்கிறோம்; மற்றவர்களிடம் நற்பண்புகளையும் நற்செயல்களையும் வெளிப்படுத்துகிறோம்; ஆனால் தனிமையில் இருக்கும் போது பாவங்களைச் செய்கிறோம்; நாம் நமது அந்தஸ்த்தைப் போன்ற அந்தஸ்துகளைப் பெற்றுள்ளவர்களுடனும், நமக்கு ஒத்த கலாச்சாரப் பின்னணிகளையும் கருத்துக்களையும் நம்முடன் பகிர்ந்து கொள்பவர்களிடமும் கண்ணியமாக நடந்து கொள்கிறோம்; ஆனால் மற்றவர்களுடன் சரிசமமாக நடந்து கொள்வதில்லை; நாம் அனைவரும் அல்லாஹ்வின் படைப்புகள் தான் என்பதை மறந்து விடுகிறோம்.

இந்நிலையில், நாம் **முஹாஸபா** வைச் செயல்படுத்தும் போது, நம்மால் செய்ய முடிகின்ற சிறிய நற்காரியங்களால் நாம் ஏமாற்றப்படாமலி ருப்பதை அது உறுதி செய்யும்; எல்லாக் காரியங்களையும் நாம் பரிபூரணமாகச் செய்து விடவில்லை; நாம் **முன்னேற்றம்** காண வேண்டிய துறைகள் இன்னும் பல உள்ளன எனும் சிந்தனையை அது உருவாக்கும்.

**இரண்டாவதாக: சுய முன்னேற்றத்துக்காக முஹாஸபா வைச் செயல்படுத்துதல்**

நாம், நமது செயல்கள் மற்றும் வேலைகள் விஷயத்தில் **சுய பரிசோதனை** செய்து கொள்ளும் போது, சிறந்த இலக்கை, குறிக்கோளை நாம் இன்னும் அடைய வேண்டியதுள்ளதே, அதனை அடையாமலிருக்கின்றோமே, சில கெட்ட பழக்கங்களை இன்னும் நாம் தவிர்க்காமல் இருக்கின்றோமே என நாம் நினைத்து, **வருத்தமடையலாம்;** ஏமாற்றத்தையும் உணரலாம்.

இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நவின்றுள்ளார்கள்:

"தவறுகளை நினைத்து **வருந்துவதானது**, பாவமன்னிப்புத் தேடுவதன் [ஆரம்ப நிலையாகும்]" [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் இப்னுமாஜா ரஹ்]

**வருத்தப்படுவது** அவசியமான விஷயமாகும்; காரணம், அதன் மூலம் வருங்காலத்தில் மீண்டும் அதே தவறுகளைச் செய்வதிலிருந்து நாம் தவிர்ந்து கொள்ள முடியும். நாம் வீணாக்கிய நேரங்களை நினைத்து, அவற்றைப் பயனுள்ளவையாக ஆக்கியிருக்கலாமே என வருந்தலாம்; நாம் நோய்வாய்ப்படும் வரை நமது உடல்நலத்தைப் புறக்கணித்து விட்டோமே என நினைத்து வருந்தலாம். இவ்வாறு வருத்தப்படுவதானது, நமது வருங்காலச் செயல்களில் நாம் விழிப்புணர்வுடன் இருப்பதற்கும், சிறந்த **நோக்கத்துடன்** செயல்படுவதற்கும் நம்மை ஆர்வமூட்டும்.

**பாசத்திற்குரிய ஜமாஅத்தார்களே**!

**முஹாஸபா** செய்து கொள்வதானது, நமது வாழ்க்கையை முன்னேற்றும் செயல் மட்டுமல்ல, மாறாக, அத்துடன், மறுமைத் தீர்ப்பு நாளுக்காக நம்மை நாம் தயார் செய்து கொள்வதற்கும் அது பயன்படுகிறது. *"நீங்கள் கேள்வி கேட்கப்படும் முன்பாக, உங்களை நீங்கள் கேள்வி கேட்டுக் கொள்ளுங்கள்"* என ஒரு கூற்று உள்ளதை நாம் அறிவோம்.

நினைவில் கொள்ளுங்கள்! நாம் செய்யும் ஒவ்வொரு நற்காரியத்துக்கும் அல்லாஹ்வின் பார்வையில் மதிப்பு உண்டு. **முஹாஸபா** செய்து கொள்வதானது, நாம் தொழில் செய்யும் இடங்களில் நமது பொறுப்புகளை நாம் பரிபூரணமாகச் செய்வதற்கும், சமுதாயத்தில் முறையாகவும் ஒழுக்கமாகவும் செயல்படுவதற்கும், சவால்களை எதிர்கொள்ளும் போது நாம் பொறுமையாக இருப்பதற்கும் நமக்கு உதவியாக இருக்கும். மேலும் அது இஹ்ஸான் எனும் உபகாரச் சிந்தனையை உருவாக்குகிறது. அல்லாஹ்வை நாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம் எனும் உணர்வுடன் நாம் இருப்பதற்கும் அல்லது குறைந்த பட்சம் அல்லாஹ் நம்மை எப்போதும் கவனித்துக் கொண்டிருக்கின்றான் எனும் உணர்வோடு நாம் இருப்பதற்கும் உதவியாக உள்ளது.

நாம் தொடர்ந்து சுய பரிசோதனை செய்து கொள்வதானது, மேற்கொண்டு விழிப்புணர்வுமிக்கவர்களாக நாம் ஆகுவதற்கும், அதிகம் நன்றி செலுத்துபவர்களாக ஆகுவதற்கும், நமது வாழ்க்கையில் சிறந்த நோக்கத்துடன் வாழ்வதற்கும் வழிகாட்டட்டுமாக! அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் அவனது திருப்தியைப் பெற்றதாக ஆக்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَالَ فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنْهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا المُسْتَضْعَفِينَ فِي غَزَّة وَفِي فِلَسْطِينَ وَفِي كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ

فَرَجًا، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ اكْتُبِ السِّلْمَ وَالسَّلاَمَ وَالأَمْنَ وَالأَمانَ لِلْعالَمِ كُلِّهِ وَلِلنّاسِ أَجْمَعِينَ. رَبَّنا آتِنا فِي الدُّنيا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنا عَذابَ النّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي الْقُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذْكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.